பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 24 வெள்ளிக்கிழமை 10.10.2025 கதிர் 334

## இனி இது ரகசியம் அல்ல!

மன்னார் காற்றாலை விடயத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 14 காற்றாலைகள்திட்டத்தைஒருபோதும் இடைநிறுத்துவதில்லை

2

# ஜெனிவா தீர்மானம் குறித்து நாடாளுமன்றில் விவாதம்

### எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை ஏற்றது ஆளும்தரப்பு

இலங்கை தொடர்பான ஜெனிவா தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு எதிர்க்கட்சியினால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில், அந்தக் கோரிக்கையை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்வதாக அயலுறவுத்துறைம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜெனீவா தீர்மானம் தொடர்பில் அயலுறவுத்துறைம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றியதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி பிரதம கொரடா கயந்த கருணாதிலக்கவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஜெனீவா தீர்மானம் தொடர்பான அமைச்சரின் விசேட உரையை தொடர்ந்து, குறித்த தீர்மானம் குறித்து ஜெனிவாவில் வாக்கெடுப்பைக் கோராமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பினர். இதன்போது சபையில் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது.

7

# ஐ.நாவில் வாக்கெடுப்பு கோரியிருந்தால் ஆதரவை உறுதிப்படுத்தியிருக்கலாம்

### ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு ஆளும்தரப்பு வாக்கெடுப்பு கோரி இருந்தால் உலக நாடுகளின் ஆதரவை உறுதிப்படுத்தி இருக்கலாம் என எதிர்க்கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அயலுறவுத்துறை அமைச்சர் முன்வைத்த கருத்துத் தொடர்பில் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்

7

# எல்லை நிர்ணயத்தை முடித்தே மாகாண சபைகளுக்கு தேர்தல்

### அயலுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு



எல்லை நிர்ணய பணிகள் முடிவடைந்த பின்னர் அடுத்த வருடத்தில் மாகாண சபைகள் தேர்தலைநடத்தநடவடிக்கை எடுக்கப்படும் என அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் எவ்வலை நிர்ணய பணிகள் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் வரையில் எந்த முறையில்அந்தத்தேர்தல்நடத்தப்படும் என்றுஇப்போதேகூறமுடியாதுஎன்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று

2

# பெலவத்தையில் இருந்து அரசு இயக்கப்படவில்லை

### ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா



பெலவத்தையிலிருந்து தனிநபர் ஒருவரால் ஆளும்தரப்பு நிர்வகிக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் வெளிப்படுத்த முற்படுகின்றன. பெலவத்தை அலுவலகத்தில் தேசிய மக்கள் சக்திமற்றும்ஜே.வி.பியின் முக்கிய கூட்டங்கள் மாத்திரமே இடம்பெறுகின்றன. எதிர்க்கட்சிகள் அதனை மிகைப்படுத்திக் கூறிப் பெரிதுபடுத்துகின்றன

2

# ஊழல் மோசடியாளர்களை ஆளும்தரப்பு பாதுகாக்கிறது

### கம்மன்பில குற்றச்சாட்டு



ஊழல் மோசடியாளர்களை அரசுத் தலைவர்அநுரகுமாரவின் ஆளும்தரப்பு பாதுகாக்கிறது என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில குற்றங்சாட்டியுள்ளார்.

'தண்டனை வழங்கப்படவேண்டும் என

6

# மாகாண சபைத் தேர்தலை நிச்சயம் நடத்தியே தீருவோம்

### சந்தேகப்படாதீர்கள் என்கிறார் பிரதமர்



இனங்களைப் பிரித்து முரண்பாடுகளுடன் அரசியல் செய்யும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வந்து அனைத்து இன மக்களையும் இலங்கையர் என்ற அபிமானத்துடன் ஒன்றிணைத்துள்ளோம். மாகாண சபைத் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தல் குறித்து எவரும் சந்தேகம் கொள்ள வேண்டிய தேவையில்லை. தேர்தலை பிற்போடுவதற்கான அவசியம் எமக்கு கிடையாது. தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு தீர்வு கண்டவுடன் தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களில்

2

# நாணய நிதிய 5ஆம் கட்ட மீளாய்வு அதிகாரிகள் மட்டத்தில் இணக்கம்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பில் இலங்கை அதிகாரிகளுடன் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும், நாணய நிதிய செயற்திட்டத்துக்கு அமைவாக 2026 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச்சட்டமூலம்

6

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி; பரவிய செய்தியால் சபையில் சர்ச்சை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னால் இந்தியா இருப்பதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்ன, உயர் பதவிகள் தொடர்பான நாடாளுமன்ற குழுவில் கூறியதாக தெரிவித்து சமூக வலைத்தளங்களில் வெளியான செய்திகள் குறித்து நேற்று வியாழக்கிழமை சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

புதன்கிழமை நடைபெற்ற உயர் பதவிகள் தொடர்பான நாடாளுமன்ற குழுவுக்கு வருகை தந்திருந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரட்ன, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னால் இந்தியா இருப்பதாகவும் கூறியுள்ளதாக

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்பதுதான் ஆளும்தரப்பின் திட்டவட்டமான முடிவு என்பதைச் சில நாட்களுக்கு முன்னரே தெரிவித்திருந்தேன். போராட்டங்கள், அழுத்தங்களுக்குப் பணிவதில்லை என்பதில் ஆளும்தரப்பு தீவிரமாக இருப்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

ஆளும்தரப்பின் இந்த முடிவை மன்னார் ஆயர் நேற்று உறுதிப்படுத்தினார். அவர் மூன்று தினங்களுக்கு முன்னர் அரசுத் தலைவரைச் சந்தித்து இந்த விடயத்தில் ஒரு இணக்கத்திற்கு வந்து உடன்பாடொன்றில் கையெழுத்திட்டார் என்று செய்திகள் வெளியாகிய பின்னணியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்திருந்தார். 14 காற்றாலைகளையும் மன்னார் தீவில் அமைப்பதிலே மிகவும் திடமாக இருக்கின்றார்கள் என்றார் ஆயர்.

செய்தியாளர்கள் சந்திப்பில் ஆயர் தெரிவித்த விவரங்களின் சாராம்சத்தை இங்கே தருகின்றேன்.

நான் அரசுத் தலைவரைச் சந்தித்தேன். காற்றாலைகள் தொடர்பான எமது பிரச்சினையை முன்வைத்தேன். இந்தச் சந்திப்பிற்கு மாவட்டச் செயலரோடு இணைந்து இந்து மற்றும் இஸ்லாமிய மத குருக்களையும் அழைத்துச் செல்வதாக இருந்தேன். ஆனால், அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பாக நான் அரசுத் தலைவரைச் சந்தித்தது இது மூன்றாவது தடவை. முதல் தடவை தனியாகவும், இரண்டாவது தடவையாக ஆயர் மன்றத்துடன் இணைந்து சென்றும் சந்தித்தேன். இந்தப் பிரச்சினையை நான் இலங்கை ஆயர் மன்றத்துக்கும் எடுத்துச் சொன்னேன். இலங்கை ஆயர் மன்றம் எங்களுடன் இணைந்து செயற்பட்டது. கர்தினால், ஆயர் மன்றத் தலைவர் ஆகியோரினால் முன்னெடுக்கப்பட்ட சந்திப்புக்கும் சென்றேன். இறுதியாக கடந்த 2 தினங்களுக்கு முன் அரசுத் தலைவரைத் தனியாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அந்த 14 காற்றாலைகளையும் மன்னார் தீவில் அமைப்பதிலே அவர்கள் மிகவும் திடமாக இருக்கின்றார்கள். நான் அங்கு எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை. நான் எங்களுடைய மக்களின் நிலைப்பாட்டையும், மன்னாரில் ஏன் காற்றாலை வேண்டாம் என்று மக்கள் கூறுகின்றார்கள் என்பதையும் அரசுத் தலைவரிடம் தெளிவுபடுத்தினேன். எனினும் இந்த 14 காற்றாலைகளையும் அமைத்ததன் பின்னர் மன்னாரில் கனிய மணல் அகழ்வையோ அல்லது மேலதிகக் காற்றாலைகளையோ ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற வாக்குறுதியை மட்டுமே அவர் மீண்டும் மீண்டும் கூறினார். கனிய மணல் அகழ்வு மன்னாரில் முற்றாக இல்லை என்பதை அரசுத் தலைவர் உறுதிப்படுத்தினார். அமைச்சரவை ஊடாக அதனை எமக்கு உறுதிப்படுத்தித் தருவார் எனவும், குறித்த 14 காற்றாலைகளையும் மக்கள் அனுமதிக்கின்றபோது எந்தவோர் ஆளும்தரப்பும் இந்தச் சிறிய தீவில் கனிய மணல் அகழ்வு மற்றும் மேலதிக காற்றாலை அமைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடமுடியாதவாறு தான் செய்வார் என்றும் அதற்கும் அமைச்சரவை ஊடாக உறுதிமொழி வழங்குவேன் எனவும் அரசுத் தலைவர் கூறினார்.

எது, எப்படியாக இருந்தாலும் நான் மன்னாரில் மக்களைச் சந்தித்ததன் பிற்பாடு இதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் என்று கூறி விட்டு அங்கிருந்து வந்தேன். நாங்கள் எவ்வித ஆவணத்தி லும் கையொப்பம் இடவில்லை. எனினும் உண்மைக்குப் புறம்பான செய்திகள் இணைய ஊடகங்களில் வெளிவந்துள்ளன. நான் எவ்வித கருத்தும் தெரிவிக்க வில்லை. தாங்களாகவே ஊகித்து வெளியிட்ட செய்திகளாக அவை அமைந்துள்ளன.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடனும் இன்னும் கலந்துரையாட வேண்டியுள்ளது. அதன் பின்னர் நாங்கள் ஒரு நிலைப்பாட்டுக்கு வருவோம் என்றார் ஆயர்.

மக்களுடன் கலந்துரையாடினாலும் கலந்துரையாடாவிட்டாலும் காற்றாலைகள் அமைக்கும் பணி தொடரும் என்பது சர்வ நிச்சயம். மிக விரைவில் வடக்கு கிழக்கு முழுவதையும் முடக்கி ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் வீதிக்கு இறக்கி முழு வீச்சில் ஒரு போராட்டத்தைக் கட்டமைக்க முடிந்தால் தவிர இந்தத் திட்டத்தில் சிறு தாமதத்தைக்கூட ஏற்படுத்த முடியாது என்பதுதான் தற்போதைய நிலை. சிறை நிறப்புப் போராட்டம் போன்ற புதிய போராட்டங்கள் உட்பட பத்தாக்க வழிமுறைகளை நோக்கித் தீவிரமாகச் சிந்தித்தால் தவிர, ஆளும்தரப்பின் நிலைப்பாடு இம்மியளவும் நகர்வதற்கு இடமில்லை.

இந்தக் காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்தினால் அதனால் ஆளும்தரப்புக்கு ஏற்படப்போகும் பொருளாதார நட்டம் (இழப்பீடு) இந்த ஆளும் தரப்பின் கைகளை மீறிய விடயம். அதனால் ஆளும்தரப்பு இந்த விடயத்தில் மக்கள் மீது மூர்க்கத்தனமான செயற்பாட்டையே வெளிப்படுத்தும் என்று அறிய முடிகிறது. .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜேவிபி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவா தீர்மானம் தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத்தின் உரையை தொடர்ந்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜீவன் தொண்டமான் தனது கேள்வியின்போது, ஜெனீவாவில் மாகாண சபைகள் தொடர்பில் எல்லை நிர்ணயங்கள் குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரால் குறிப்பிடப்பட்டிருந்து. அதன்படி எல்லை நிர்ணய நடவடிக்கைக்கான கால அளவு எவ்வளவு எனக் கேட்கிறேன் என்றார்.

இதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், எல்லைநிர்ணய நடவடிக்கை தொடர்பான பணி நாடாளுமன்றத்தினுடையது. அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அந்த நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அடுத்த வருடத்தில் தேர்தல் நடக்கும். எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் புதிய முறையிலா? அல்லது பழைய முறையிலா? தேர்தலை நடத்துவது என்று முடிவு செய்யப்படும். எவ்வாறாயினும் நாடாளுமன்றமே அதனை தீர்மானிக்கும் என்றார்.

## உயிர்த்த....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்து சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்த செய்திகளை மறுத்து பொலிஸ் ஊடகப் பிரிவினால் நேற்று அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்தது.

அது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, நேற்று நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து கருத்து வெளியிட்ட போதே சபையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

"நான் உயர் பதவிகள் தொடர்பான நாடாளுமன்ற குழுவில் உறுப்பினராக உள்ளேன். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரட்ன அந்தக் குழுவிற்கு வருகை தந்திருந்தபோது, நிஸாம் காரியப்பர் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்து கூறுகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பான செய்தி சமூகவலைத்தலங்களில் வெளியாகி இருந்தது. இது தொடர்பில் சகல ஊடகங்களும் எங்களிடம் கேட்கின்றன.

இந்நிலையில், தற்போது பொலிஸ் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில், அதன் பின்னால் இந்தியா இருப்பதாக அவர் கூறவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அவர் அவ்வாறான கருத்தைக் கூறவில்லை. எனினும் இது தொடர்பில் உடனடியாகத் தெளிவுப்படுத்தவேண்டும். உயர் பதவிகள் தொடர்பான குழுவில் இதுபற்றிக் கூறாமல் நீதிமன்றத்தில் யார் பிரதான சூத்திரதாரி என்பதனை கூறுங்கள். இது தொடர்பில் அமைச்சரோ, பிரதி அமைச்சரோ அல்லது பொறுப்புவாய்ந்த ஒருவரோ கூற வேண்டும்" என்றார்.

பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறுகையில், 'இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது. அந்த செயற்குழுவில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். அவர் அவற்றை ஊடகங்களுக்குக் கூறவில்லை. அது விசாரணையின் ஒரு பகுதி என்பதனால் அந்த கருத்தை நீக்குமாறு உத்தரவிட முடியாது. வேறு வழியில் இந்த விசாரணைகளைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்களுக்கு இடமளிக்க வேண்டாம் என்று கோருகின்றேன்' - என்றார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் எழுந்த தயாசிறி ஜயசேகர, 'நாடாளுமன்ற குறித்த விடயத்தை நிஸாம் காரியப்பர் அதனை டுவிட் செய்துள்ளார். உயர்பதவிகள் தொடர்பான குழுவில் நடக்கும் விடயங்களை எவரும் டுவிட் செய்வதில்லை. அவர் புதிய உறுப்பினர் என்பதால் அது அவருக்கு தெரியாமல் இருக்கும். அவர் இன்று (நேற்று) காலையிலேயே டுவிட் செய்திருந்தார். ஆனால் இந்த விடயங்கள் நேற்று (புதன்கிழமை) மாலையே வெளியாகியிருந்தன' என்றார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் வசந்த சமரசிங்க கூறுகையில், 'உயர் பதவிகள் தொடர்பான குழுவுக்கு அதிகாரிகள் பொறுப்புக் கூறலுடனேயே அழைக்கப்படுகின்றனர். அது நாடாளுமன்றத்தில் உள்ள பிரதான செயற்குழுவாகும். இங்கு வரும் அதிகாரிகள் அந்த குழுவின் மீது நம்பிக்கை வைத்தே கேள்விகளுக்கு பதிலளிக்கின்றனர். அவ்வாறு பதிலளிக்கும் விடயங்கள் அந்த குழுவின் உறுப்பினர்களால் தனிப்பட்ட சமூகவலைத்தள கணக்குகளில் வெளியிடப்படுகின்றது என்றால் அது பாரதூரமான குற்றமாகும். அவர்களுக்கு எதிராகவே விசாரணை நடத்தப்படவேண்டும். இவ்வாறு வெளியில் சமூகவலைத்தளங்களில் எழுதும் பழக்கத்தை நிறுத்தவேண்டும். சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை அழைத்து அவரை எச்சரிக்கவேண்டும். அவரை அந்த குழுவில் இருந்தும் வெளியேற்ற வேண்டும்' என்றார்.

## மாகாண....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்கு முன்னுரிமையளித்து அவற்றை செயற்படுத்தியுள்ளோம். போதைப்பொருள் ஒழிப்பு, அரச நிர்வாகம் டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் சட்டவாட்சி கோட்பாட்டை சிறந்த முறையில் செயற்படுத்தல் ஆகியவற்றுக்கு முன்னுருமையிக்கப்பட்டுள்ளது.

இனங்களைப் பிரித்து முரண்பாடுகளுடன் அரசியல் செய்யும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வந்து அனைத்து இன மக்களையும் இலங்கையர் என்ற அபிமானத்துடன் ஒன்றிணைத்துள்ளோம். அனைத்து இனமக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு ஜனநாயக பாதையில் பயணிக்கிறோம். வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் எவற்றுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை அடையாளப்படுத்தியுள்ளோம். வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் ஒரே கட்டத்தில் செயற்படுத்த முடியாது.

நாங்கள் ஆளும்தரப்பை பொறுப்பேற்கும்போது நாடு எவ்வாறான நிலையில் இருந்தது என்பதை மீண்டும், மீண்டும் குறிப்பிட வேண்டிய தேவை கிடையாது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இலங்கைக்கு கடன் வழங்குவதும், அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஒதுக்குவதும் ஸ்தம்பிதமடைந்திருந்தது. நாட்டை இல்லாதொழித்தவர்களை புறக்கணித்து மக்கள் எமக்கு ஆணை வழங்கினார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற நிலைப்பாட்டை எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார்கள். இன்றும் அந்த நிலைப்பாட்டில் தான் அவர்கள் உள்ளார்கள். இவர்களின் நிலைப்பாட்டை நாங்கள் தோற்கடித்து, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நம்பிக்கையை பெற்றுக்கொண்டுள்ளோம்.

ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்தில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எமது ஆட்சியில்தான் அமைதியான முறையில் இரண்டு பிரதான தேர்தல்களை நடத்தினோம். தேர்தல் காலத்தில் ஊரடங்கு சட்டத்தை நாங்கள் பிரயோகிக்கவில்லை. இது சாதாரனதொரு விடயமல்ல,

மாகாண சபைத் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தல் குறித்து எவரும் சந்தேகம்கொள்ளவேண்டிய தேவையில்லை. தேர்தலை பிற்போடுவதற்கான அவசியம் எமக்கு கிடையாது. தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு தீர்வு கண்டவுடன் தேர்தல் நடத்தப்படும்.

சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரம் மற்றும் தத்துவங்களை உறுதிப்படுத்தியுள்ளோம். புதிய ஆணைக்குழுக்களை உருவாக்குவதற்கும், ஆணைக்குழுக்களுக்கு சிறந்தவர்களை நியமிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

கல்வி துறையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். நடைமுறை கல்வி முறைமையில் உள்ள குறைப்பாடுகள், பாடசாலை முறைமையில் காணப்படும் பற்றாக்குறைகளுக்கு தீர்வு காண்பதற்கும், உயர்கல்வி முறைமையை விரிவுப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். சகல தரப்பினரும் கோரிய புதிய கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அடுத்தாண்டு முதல் 1-6 தரங்களுக்கான பாடத்திட்டத்தை மறுசீரமைக்கவும், கல்வி ஆணைக்குழுவையும் உருவாக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் - என்றார்.

## பெலவத்தையில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜே.வி.பி. கட்சியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெலவத்தையிலிருந்து தனிநபர் ஒருவரால் ஆளும்தரப்பு நிர்வகிக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் வெளிப்படுத்த முற்படுகின்றன. ஆனால் அது உண்மையல்ல. யாராலும் அதனைச் செய்யமுடியாது. இப்போது ஒரு ஆளும்தரப்பு அமைக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பின் தீர்மானங்கள் அரசுத் தலைவர் மற்றும் அமைச்சரவையால் எடுக்கப்படுகின்றன. அந்தத் தீர்மானங்கள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளால் செயற்படுத்தப்படுகின்றன.

ஆளும்தரப்பு என்பது தேசிய மக்கள் சக்தியாகும். அந்த ஆளும்தரப்புக்கு முன்மொழிவுகளைத் தரவும், ஆளும்தரப்பின் செயற்பாடுகளுக்கு பங்களிக்கவும், உத்திகளைத் தயாரிக்கவும், நடவடிக்கைகளை எடுக்கவும் எமக்கு இடமும் தேவையும் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் வழிநடத்தல் குழு பெலவத்தையிலேயே தொடர்ந்தும் கூடுகிறது. ஜேவிபியின் மத்திய குழுவும் பெலவத்தையிலேயே கூடுகிறது.

இவ்வாறு இரு கூட்டங்களின் போதும் அரசுத் தலைவர், பிரதமர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் அங்கு ஒன்று கூடுகின்றனர். ஆளும்தரப்பில் எந்த பதவிகளையும் வகிக்காத பலர் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தில் இருக்கின்றனர். நானும் அங்கிருக்கின்றேன். நாம் குறைபாடுகளைப் பற்றியும் கலந்துரையாடுகின்றோம். எதிர்காலத்தில் செய்ய வேண்டிய விடயங்கள் பற்றியும் பேசுகின்றோம். பல யோசனைகள் முன்வைக்கப்படுவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான இணக்கப்பாடுகளும் எட்டப்படுகின்றன.

ஆளும்தரப்பை செயற்படுத்துவதில் பெலவத்தையும் தொடர்புபட்டுள்ளது. பெலவத்தை என்றகட்டடம் தொடர்புபடவில்லை. இரு கட்சிகளும் அங்கு கூடுவதால் அந்த இடம் ஆளும்தரப்புடன் தொடர்புபட்டுள்ளது. எனினும் பெலவத்தையில் தனிநபர் ஒருவர் கைகளில் கைத்தொலைபேசியை வைத்துக்கொண்டு ஆளும்தரப்பை வழிநடத்துகிறார் என்று கூறுவது மிகைப்படுத்தலாகும். ஆளும்தரப்பு அங்கிருந்து நிர்வகிப்படுவதாக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்களே அரசியல் பழிவாங்கலும் இடம்பெறுவதாகக் கூறுகின்றனர். அவர்கள் கூறுவதைப் போன்று பெலவத்தையில் எந்த வகையிலும் அரசியல் பழிவாங்கல் திட்டமிடப்படவில்லை என்றார்.

## நாணய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைக் கருத்திற்கொண்டே அதற்கு இயக்குனர் சபையின் அனுமதி வழங்கப்படும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்திட்டப் பிரதானி எவான் பபஜோர்ஜியோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டம் தொடர்பான 5ஆம் கட்ட மீளாய்வை மேற்கொள்ளும் நோக்கில் கடந்த செப்டெம்பர் 24 நாட்டை வந்தடைந்த இலங்கைக்கான செயற்திட்டப் பிரதானி எவான் பபஜோர்ஜியோ தலைமையிலான நாணய நிதிய அதிகாரிகள் குழுவினர், இக்காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நடத்தியதுடன் பெரும்பாகப் பொருளாதார அபிவிருத்திகள், பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை அமுல்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இந்நிலையில் தமது அவதானிப்புக்கள் மற்றும் தீர்மானங்களை அறிவிக்கும் நோக்கில்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# முத்து நகர் காணிகளை மீண்டும் மக்களுக்கே வழங்கவேண்டும்

## கொழும்பு மாநகர உறுப்பினர் கலீலுர் ரஹ்மான் தெரிவிப்பு.

(நூருல் ஹுதா)

அன்று ஒரு கதையும், இன்று ஒரு கதையும் கூறும் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை அரசியல்வாதி மக்களை ஏமாற்றும் வேலைகளையே செய்கிறார். கடந்தகாலங்களில் மக்களுடன் இணைந்து போராடியபோது கண்களை மூடிக் கொண்டா அவர் மக்களுடன் இணைந்து போராடினார். கடந்தகாலங்களில் 04 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த மாவட்டத்தில் உச்ச அதிகாரத்தில் இருந்த காலத்தில் இந்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும். அவர்கள் விட்ட பிழையே மக்கள் இன்று கஷ்டப்பட காரணம். முழு பலமிக்க இந்த ஆளும்தரப்பு, முத்து நகர் காணிகளை மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும், கொழும்பு மாநகர உறுப்பினருமான கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் முத்து நகர் காணி மீட்பு போராட்டகாரர்களுக்கு ஆதரவளித்து செய்தியாளர்களிடம் பேசும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர், 1972ம் ஆண்டு காலப்பகுதியில் முத்து நகர் காணிகள் ஆளும்தரப்பினால் மக்களுக்கு வழங்கப்பட்டது. வேறு வேறு பிரதேசங்களில் இருந்து வந்து இந்த காணிகளில் மக்கள் காலகாலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனாலும் அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 1984ஆம் ஆண்டு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானது என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது. அந்த காலப்பகுதியில் திருகோணமலை மாவட்ட 11 கிராம நிலதாரி பிரிவுகளை சேர்ந்த காணிகள் துறைமுக அதிகார சபைக்கு இதன் மூலம் சொந்தமாக்கப்பட்டுள்ளது. இப்படி இருந்தபோதிலும் 1972ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இந்த முத்து நகர் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களம் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி அவர்களின் விவசாய நடவடிக்கையை மேம்படுத்தத தேவையான சகல வசதிகளையும், சலுகைகளையும் செய்து கொடுத்துள்ளார்கள். கடந்த ஆளும்தரப்புகள் விட்ட பிழைகளை சுட்டிக்காட்டியே இந்த ஆளும்தரப்பு மக்கள் ஆணையை பெற்றது. அதன் தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்ட அதிக முஸ்லிம் பிரதேசங்கள் முதன் முறையாக தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கினர். எனினும் துரதிஷ்டவசமாக அமைச்சரவை அமைச்சர் ஒருவர் முஸ்லிங்களுக்கு கிடைக்காமையால் விரக்தியுற்ற மக்கள் இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய ஆணையைக்குறைத்துக்கொண்டார்கள். இந்த நிலைக்கு மக்களைத் தள்ளியதும், இந்தப் பிரச்சினையை முஸ்லிம் அரசியல்வாதிகள் கையிலெடுக்ககக காரணமும் ஆளும்தரப்பின் போக்கே தவிர வேறில்லை.

கடந்த காலங்களில் இந்த மக்களின் முத்து நகர் காணிகள் பிரச்சினைக்காக மக்களுடன் இணைந்து அதிகாரம் கிடைக்க முன்னர் போராடிய தேசிய மக்கள் சக்தியின் இன்றைய அரசியல்வாதிகள் அதிகாரம் கிடைத்த பின்னர் தடுமாறுகிறார்கள். இன்று தடுமாறும் இவர்கள் ஏன் அன்று மக்களுடன் இணைந்து போராடினார்கள் என்று கேட்க விரும்புகிறேன். 3:2 பெரும்பான்மையை கொண்ட நாடாளுமன்றத்தையும், நிறைவேற்று அதிகார அரசுத் தலைவரையும் கொண்டுள்ள இந்த ஆளும்தரப்பு, விவசாயம் செய்து வரும் முத்து நகர் காணிகளை மக்களுக்கு கொடுக்கவிரும்பினால் கொடுக்கலாம். இதனை விவாதப்பொருளாக வைத்துகொண்டிராமல் மக்களின் பிரச்சினையை தீர்க்க ஆளும்தரப்பு உடனடியாக முன்வர வேண்டும்.

சட்டவிரோத காணி என இப்போது கூறும் ஆளும்தரப்பினர் தேர்தலுக்கு முன்னர் அதிகாரம் கிடைக்க முன்னர் முஸ்லிம் மக்களுடன் இணைந்து இந்த காணியை மீட்க போராடியது ஏன்? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அன்று ஒரு கதையும், இன்று ஒரு கதையும் கூறும் தேசிய மக்கள் சக்தி




திருகோணமலை அரசியல்வாதி மக்களை ஏமாற்றும் வேலைகளையே செய்கிறார். கடந்த காலங்களில் போராடிய போது கண்களை மூடிக்கொண்டா அவர் மக்களுடன் இணைந்து போராடினார்? கடந்த காலங்களில் 04 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த மாவட்டத்தில் உச்ச அதிகாரத்தில் இருந்த காலத்தில் இந்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும். அவர்கள் விட்ட பிழையே மக்கள் இன்று கஷ்டப்பட காரணம். கடந்த கால ஏமாற்று அரசியல்வாதிகளை நிராகரித்தே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை வழங்கினார்கள். அவர்களே மக்களை வீதிக்கு வரவழைப்பது நியாயமில்லை. நாட்டையும், நாட்டு வளங்களையும் பாதுகாப்பதில் எப்போதும் அர்ப்பணிப்பு மிக்க சமூகமான முஸ்லிம் சமூகம் இருந்து வந்துள்ளது.

முஸ்லிங்கள் வாழ்ந்த காணிகள் கூட இன்று காடாக அங்கு மாறியிருக்கிறது. அந்தக் காணிகளையும்கூட ஆளும்தரப்பு விடுவிக்க முன்வர வேண்டும். ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் மீது அரச படைகளை கொண்டு அராஜகத்தை கட்டவிழ்த்து விடும் ஆளும்தரப்பு அந்த மக்கள் விவசாய நடவடிக்கைகளை செய்யவிடாமல் குளங்களையும், விவசாய கிணறுகளையும் மூடி வருகிறார்கள். விவசாய நடவடிக்கை இடம்பெற்ற தடயங்கள் கூட அழிக்கப்பட்டு வருகிறது. இவைகளை முழுமையாக நோக்கும் போது சர்வதேச அஜந்தாக்களுக்கு முத்து நகர் மக்கள் பலியாக்கப்படுகிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது என தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காலம் தாழ்த்தும் அரசியல் உத்தி

இலங்கையில் மாகாண சபைகள் (Provincial Councils) காலாவதியாகி பல ஆண்டுகள் ஆகின்றன. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய அந்த ஆட்சித் தளங்கள் இன்று வெறிச்சோடியுள்ளன. இந்நிலையில், மாகாண சபைத் தேர்தல் குறித்து மீண்டும் ஆளும்தரப்பின் புதிய 'காலஅட்டவணை' வந்துள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் அயலுறவுத்துறை அமைச்சர் மற்றும் பிரதமர் ஆகிய இருவரும் 'எல்லை நிர்ணயப் பணிகள் முடிந்த பின்னர்தான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம்' என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர். மேலும், அந்தப் பணிகளை முடித்து 'அடுத்த வருடத்திற்குள் தேர்தலை நடத்துவோம்' என்றும் கூறினர். ஆளும்தரப்பு இப்படி வாக்குறுதியளிப்பது ஒன்றும் புதிதல்ல. இதுபோன்ற வாக்குறுதி ஏற்கனவேயும் வழங்கப்பட்டுள்ளது. வாக்குறுதி தருவதும் அதை மறப்பதும் இவர்களுக்குப் புதிதல்ல

### பழக்கமாக மாறிய வாக்குறுதி

முதலில் 2025ஆம் ஆண்டுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்று ஆளும்தரப்பு அறிவித்தது. ஆனால் இப்போது அதே வாக்குறுதி 'எல்லை நிர்ணயம் முடிந்த பின்' என்ற புதிய நிபந்தனையுடன் வந்துள்ளது. இது மக்கள் மத்தியில் ஒரு சரியான சந்தேகத்தை எழுப்புகிறது. ஆளும்தரப்புத் தேர்தலை உண்மையில் நடத்த விரும்புகிறதா, இல்லை மேலும் தள்ளிப்போட முயல்கிறதா? என்பதே அந்தக் கேள்வி.

அரசியலில் 'காலத்தை இழுத்தடிப்பது' ஒரு பழைய உத்தி. ஆனால் மாகாண சபைகள் மக்கள் ஆட்சியின் அடிப்படைச் சுற்றுச்சூழல் என்பதால், அதனுடன் விளையாடுவது ஜனநாயகத்தைப் பாதிக்கும் ஆபத்தான விளையாட்டு ஆகும்.

### தீர்க்க முடியாத சிக்கல்

ஆளும்தரப்புக்கூறும் 'எல்லை நிர்ணயம்' (Delimitation) என்பது ஒரு தொழில்நுட்பப் பணியாக மட்டுமல்ல. அதில் அரசியல் பிரச்சினைகள் தீவிரமாக சிக்கியுள்ளன. சிறிய கட்சிகள் ஏற்கனவே எல்லை நிர்ணயக் குழுவின் பரிந்துரைகளை ஏற்க மறுத்துள்ளன. சில மாகாணங்களில் முஸ்லிம், தமிழ், சிங்களப் பிரதேச எல்லைகள் குறித்த முரண்பாடுகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

இத்தகைய பிரச்சினைகள் இருக்கும் நிலையில், ஒரு ஆண்டுக்குள் அந்தப் பணிகளை முடிப்பது சாத்தியமற்றது என்பது நிபுணர்களின் கருத்து. இதை அரசாங்கமே அறிந்திருந்தும், 'அடுத்த வருடத்திற்குள்' என்ற வாக்குறுதியை வழங்குவது, காலத்தை கடத்தும் ஒரு அரசியல் உத்தி எனவே கருதப்படவேண்டும்.

### மக்களின் உரிமை மீண்டும் புறக்கணிக்கப்படுமா?

மாகாண சபைகள் இல்லாத காரணத்தால் இன்று பல மாகாண பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் காத்திருக்கின்றன. கல்வி, சுகாதாரம், வேளாண்மை, நீர் வளங்கள் போன்ற துறைகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகளை நேரடியாக அணுக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு ஜனநாயக அரசில் தேர்தலை நடத்துவது ஒரு வாக்குறுதி அல்ல – அது மக்களின் அடிப்படை உரிமை. அந்த உரிமையை 'தொழில்நுட்பப் பிரச்சினைகள்', 'நிர்வாக சிக்கல்கள்' போன்ற காரணங்களால் மீண்டும் மீண்டும் தள்ளுவது ஜனநாயகத்தின் ஆத்மாவையே சிதைக்கிறது.

### அரசியல் நலனுக்கான திட்டமா?

ஆளும்தரப்பு தற்போது பொருளாதார சவால்கள், அரசியல் அதிருப்தி, மக்கள் எதிர்ப்பு ஆகியவற்றை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில், மாகாண சபைத் தேர்தல் நடந்தால் ஆளும் கட்சிக்கு பெரிய பின்னடைவு ஏற்படும் என்பது பல அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

எனவே, 'எல்லை நிர்ணயம்' என்ற பெயரில் தேர்தலை தள்ளிப் போடுவது, அந்த நெருக்கடியிலிருந்து தற்காலிகமாக தப்பிக்க முயலும் ஒரு அரசியல் திட்டம் எனவே பார்க்கப்படுகிறது.

### ஜனநாயகத்தின் கடிகாரம் நிற்கக் கூடாது

மாகாண சபைகள் என்ற அமைப்பு, வடக்கு–கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் அதிகாரப் பங்கீட்டின் அடையாளம். அதை நீண்ட காலமாக காலி நிலையில் வைத்திருப்பது, மத்திய அரசின் ஆட்சிச் சாயலை அதிகரிக்கும் அபாயத்தை உருவாக்குகிறது.

அரசாங்கம் உண்மையில் ஜனநாயகத்தை மதிக்க விரும்புகிறதென்றால், எல்லை நிர்ணயத்தை காரணமாகக் காட்டாமல் உடனடியாக தேர்தலுக்கான நேர அட்டவணையை அறிவிக்க வேண்டும்.

மக்களின் குரல் கேட்கப்படாமல் இருப்பது ஒரு நாட்டின் மிகப்பெரிய சாபம். தேர்தல் என்பது அரசியல் வாதிகளின் விருப்ப நிகழ்வு அல்ல; அது மக்களின் உரிமை. அந்த உரிமையை 'திட்டமிட்ட தாமதங்களால்' பறிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

அதனால், மாகாண சபைத் தேர்தலை மீண்டும் காலம் தாழ்த்தும் எந்த முயற்சியும் ஜனநாயகத்தின் நம்பகத்தன்மையை குலைக்கும் செயல் ஆகும். மக்கள் இதற்கும் கண்காணிப்போடு பதில் அளிக்கத் தயாராக இருக்கின்றனர்.

## சிறுத்தைகளின் தாக்குதலில் இருந்து காப்பதற்கு விழிப்புணர்வு பலகைகள்

(கேதீஸ்)

ஹக்கல வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் தலவாக்கலை மற்றும் அக்கரப்பத்தனை பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வசிக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்கு சிறுத்தைகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வு பலகைகளை நிறுவ நடவடிக்கை எடுத்தனர்.




இந்த பகுதிகளில் அண்மையில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகமாக பதிவாகியுள்ளன. அண்மையில் சிறுத்தைகளின் இறப்பு மற்றும் கம்பி வேலிகளில் சிக்கி உயிரிழந்த சம்பவங்கள் ஏற்பட்டதை அடிப்படையாகக் கொண்டு, வனவிலங்கு அதிகாரிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு பலகைகளை நிறுவ நடவடிக்கை எடுத்தனர்.

ஹக்கல வனவிலங்கு சரணாலய பாதுகாப்பு அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுகையில், தோட்டத் தொழிலாளர்கள் தேயிலை கொழுந்துகளை பறித்தல், விறகு வெட்டுதல், தண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் விவசாயம் செய்தல் போன்ற அன்றாடப் பணிகளைச் செய்ய வெளியே செல்லும் போது, அவர்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களை தேயிலைத் தோட்டங்களுக்குள் அழைத்துச் செல்வதாகவும், மலைப்பகுதிகளில் இரவில் வீடுகளுக்கு அருகில் சுற்றித் திரியும் சிறுத்தைகள், அந்த நாய்களை வேட்டையாடும் சம்பவங்கள் அடிக்கடி பதிவாகின்றன. இருப்பினும், இதுவரை மலையகத் தோட்டப் பகுதியில் சிறுத்தைகளின் தாக்குதல்களால் எந்த உயிர்சேதங்களும் ஏற்படவில்லை என்றும், இந்த ஆண்டு சிறுத்தைகள் தொடர்பாக அலுவலகம் பல சமூக விழிப்புணர்வு திட்டங்களை நடத்தியுள்ளதாகவும், எதிர்காலத்தில் மலையகத் தோட்டப் பகுதியில் மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மத்தியஸ்த சபையினர் – பொலிஸார் இடையே கல்முனையில் சந்திப்பு

(பாறுக் ஷிஹான்)

மத்தியஸ்த சபைகள் - பொலிஸாருக்கிடையிலான இடைத்தொடர்புகளை ஆராயும் கலந்துரையாடல் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.





கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான வாஹிட் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். மேலும் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையில் கல்முனைப் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அஸார் பிரதம அதிதியாக கலந்த கொண்டு பல்வேறு விளக்கங்களை வழங்கினார்.



மேலும் மத்தியஸ்த சபைகளின் செயற்பாட்டை கல்முனை பிராந்தியத்தில் வலுவடையச் செய்யும் நோக்கில் மத்தியஸ்த சபைகளின் தேவைப்பாடுகள் குறித்தும் தவிசாளர்களிடம் கேட்டறியப்பட்டன. இது தவிர அம்பாறை மாவட்டத்துக்கான மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெற்றிச் செயற்பாடுகள் தொடர்பிலும் அது எதிர்நேக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும் அனுபவப்பகிர்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மத்தியஸ்த சபைக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# எது போராட்டம்?

என்.சத்திய மூர்த்தி

அண்மையில், யாழ்பாணத்தில், பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை மேற்கொண்ட தமிழ் அரசு கட்சி தலைவர் சிவஞானம், அண்டை நாடான இந்தியாவைச் சாடியிருக்கிறார். உண்மையை சொல்லப்போனால், அது செல்லக் கோபம், நட்புக் கோபம், அன்புக் கோபம், உரிமைக் கோபம். அல்லது, இவ்வாறெல்லாம் அதனை வகைப்படுத்தலாம்.

நடந்தது இதுதான். பத்திரிகையாளர்களை வரிந்து சந்தித்த சிவஞானம், இந்தியா, தான் பங்குவகித்து முன்னெடுத்த அரசமைப்பின் பதிமூன்றாவது திருத்தத்தை முழுமையாகச் செயல்படுத்த, இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், இது விடயத்தில், அனைத்து தமிழ் தலைமைகளும் ஒருங்கே நிற்கவேண்டும் என்று இந்திய தூதுவர் சந்தோஷ்; ஜா, தொடர்ந்து கூறிவருவதைக் குறைகூறினார்.

சிவஞானம் கூறியது போல், அரசியல் தீர்வு விடயத்திலும் பிற தமிழர் சார்ந்த பிரச்சினைகளிலும், கஜேந்திரகுமாரின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைமையிலான அணியினர் தொடர்ந்து எதிர்ப்பாட்டுப் பாடி வருகிறார்கள். கஜன் எந்த பிரச்சினையிலும் பிற தமிழ் தலைமைகளோடு ஒத்துப்போகாமல் தனியாவர்த்தனம் வாசிப்பதிலேயே சமர்த்தர்.

இதனைச் சுட்டிக்காட்டி, இந்தியத் தூதுவர் ஏன் திரும்பிதிரும்பி கஜன் உள்ளிட்ட அனைத்துத் தமிழ் தலைமைகளும் ஒரு சேர நிற்க வேண்டும் என்று நிர்பந்திக்கிறார் என்றும் சிவஞானம் கேள்வி எழுப்பி உள்ளார். இந்தக் கேள்வியில் நியாயம் இருப்பதுபோல் தோன்றினாலும், இது அநியாயமான கேள்வி, அபாண்டமான குற்றச்சாட்டு.

## கழுதை தேய்ந்து

சிவஞானத்தின் கூற்றின்படி பார்த்தால், தமிழ் காங்கிரஸ் தவிர்த்த பிற பிராந்தியக் கட்சிகள் அனைத்துமே ஒரே அணியில் எப்போதுமே நின்றுவருவது போன்ற எண்ணம் உருவாக்கப்பட்டு வருகிறது. கடந்த வருடம் நடந்தேறிய அரசுத் தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மற்றும் இந்த ஆண்டின் உள்ளாட்சித் தேர்தல்கள் அனைத்திலுமே இந்தக் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டது என்று சிவஞானம் அனைவரையும் நம்ப சொல்கிறாரா, என்ன?

இனப்போர்காலத்திய மிதவாத அரசியலைவிட்டுத்தள்ளுங்கள், சிவஞானமே மறந்துவிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்போது என்னவாயிற்று? கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, ஐந்து கட்சிகளை உள்ளடக்கி, 2013 மாகாண சபை தேர்தலை ஒட்டி வலுவடைந்த கூட்டமைப்பு எங்கே போயிற்று? அது, அரசியல் காரணங்களுக்காக உடைந்ததா? அல்லது கொள்கை அடிப்படையில் பிரிந்ததா? அல்லது, தனி நபர் ஈகோ பிரச்சினைக்குக் காவு கொடுக்கப்பட்டதா? இந்தியாவை குறித்து இப்போது சாடும் சிவஞானத்திற்கு இவற்றின் பின்னாலான உண்மை தெரிந்துதானே இருக்கும்?

தனி மரம் தோப்பாகாது. ஊர் குருவி கூவினால் சூரியன் மறைந்துவிடாது. இந்த உண்மையை தமிழ் அரசுத் தலைமையும் புரிந்துகொண்ட பின்னரே, பழைய கூட்டமைப்பின் பெயரில்லாமல், தமிழ் காங்கிரஸ் தவிர்த்த அனைத்து கட்சிகளையும், பாதி இணைத்தும் பாதி எதிர்த்தும் உள்ளாட்சி தேர்தலைச் சந்தித்தது. இந்த அணி திரளுதல், அவர்கள் யாருக்குமே மிகமிகச் சாதகமாக இருக்கவில்லை என்றாலும் நாடாளுமன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கும்போது, ஆளும் ஜேவிபி அணியினரைப் பின்தள்ளி இருந்தனர் என்பதும் உண்மை.

இந்தப் பின்னணியில், எப்போது நடைபெறுமோ என்றே தெரியாதா மாகாண சபைத் தேர்தலை மட்டுமே மனதில் வைத்து, தமிழ் அரசு தலைமையிலான அணி தொடருவதாக சிவஞானம் சொல்லி இருக்கிறார். அவரது கூற்றை, அந்த அணியில் தொடருவதாக அவர் நம்பவைக்க முயலும் கட்சித் தலைமைகள் இன்னமும் வழி மொழியவில்லை. ஏன், வேறு தமிழ் அரசுக் கட்சியின் வேறு எந்தத் தலைவரும் அவரை ஆமோதிக்கவில்லை. ஆனால். இந்த விவாதம் இதோடு நின்றுவிடவில்லை.

## ‘சேம் சைட் கோல்‘

தமிழ் அரசுக் கட்சியில் எந்தவித குழு அரசியலும் குழப்ப அரசியலும் இல்லை என்ற விதத்தில் சிவஞானம் உரையாடி உள்ளார். அதுவா உண்மை? கட்சியைப் பொறுத்தவரை, சிறீதரன் அணி, சுமந்திரன் அணி என்று இரண்டாகப் பிளவுபட்டுள்ளது அனைவரும் அறிந்ததே. இந்தக் குழு அரசியலில், கட்சியின் பிற நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவ்வப்போது பங்கெடுக்கிறார்கள் என்பதும் உண்மை.


உதாரணத்திற்கு, லஞ்ச-ஊழல் ஆணையத்தின் தலைவர் ரங்க திசநாயக்கவின் ஜேவிபி பின்னணி குறித்து அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசிய தமிழ் அரசு உறுப்பினர் சாணக்கியன், தனது, குழு தலைவர் சிறீதரனை எதிர்த்து ‘சேம் சைட் கோல்‘ அடிக்கத் தவறவில்லை. இது முதல் முறையும் அல்ல. கடைசி முறையாகவும் இருக்காது. இது விடயங்களில், சாணக்கியன், சுமந்திரனின் வலது கை என்பது உலகறிந்த விடயம்.

கட்சிக்குள் நிலவும் கோஷ்டிப் பூசல் குறித்துக்கூடக் கட்சி தலைவர் சிவஞானத்திற்கு தெரியாதா என்ன? அவருக்குத் தெரியவில்லை என்றே வைத்துக்கொள்வோம். ஊரறிந்த உண்மை, இந்தியத் தூதுவருக்குத் தெரியாது என்று அவர் எப்படி முடிவு செய்தார்? அவ்வாறு சிவஞானம் முடிவு செய்திராவிட்டால், இந்திய தூதுவரை குறித்து அவர் இவ்வாறு பேசியிருக்க மாட்டார்.



## செல்வத்தின் ‘சாதனை‘





இந்தியத் தூதுவரின் கருத்தோ, அல்லது அவ்வாறாக சிவஞானம் கருதுவதோ ஒருபுறமிருக்க, அவர் கூறிய கட்சிகளைக் தவிர்த்து தமிழர் தரப்புகளே இல்லையா? அதாவது, தமிழ் அரசு மற்றும் அதனை அண்டி உள்ள முன்னாள் கூட்டமைப்பு உறுப்புக் கட்சிகள் மற்றும் தமிழ் காங்கிரஸ் மட்டும் தானா, தமிழ் அரசியல் தலைமைகள்?

குறிப்பாக வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவும் கிழக்கில் பிள்ளையானும் தமிழ் அரசியல் செய்து வருகிறார்கள். இவர்களில் பிள்ளையான், ஈஸ்டர் தாக்குதல்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளார் என்பது உண்மை. ஆனால், இதற்கு முன்பும் அவர் இது போன்று, விடுதலை புலிகள் அமைப்பு சார்பாக 2005ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட தமிழ் அரசு தலைவர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார். சிறையில் இருந்தே போட்டியிட்டு நாடாளுமனறம் சென்று, அதிபர் கோட்டாபய ராஜபக்ச அரசிலும் அமைச்சராக இருந்தார்.

அது போன்றே டக்ளஸ் தேவானந்தாவும் தொடர்ந்து தமிழர் அரசியலில் இருந்து வருகிறார். இல்லையென்று சொல்லாமல் அண்மைக் காலங்களில் அவரது அரசியல், அதுவும் குறிப்பாக தேர்தல் அனுபவம் இறங்குமுகமாகவே இருந்து வருகிறது. ஆனால், அவரையும் இன்னமும் ஒதுக்கி வைத்து தமிழ் அரசியல் செய்போர் சாதிக்க விரும்புவது என்ன? ஏதோ காரணங்களுக்காக, அடுத்த ரவுண்டில் அவர் மீண்டெழுந்து வரமாட்டார் என்பது என்ன நிச்சயம்?

டக்ளஸை போன்று தானே தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய நட்புக் கட்சிகளும். அவர்களுக்கும் எங்கே உள்ளது தமிழ் வாக்காளர்களின் ஆதரவு? அதிலும் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட செல்வம் அடைக்கலநாதன், நாட்டிலேயே மிக் ககுறைந்த ஐயாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று ‘சாதனை‘ புரிந்தவர். சித்தார்த்தனால் தனது ஆசனத்தை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. சுரேஷ் அணி, தேர்தல் அரசியலில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டு, கன காலம் ஆகிவிட்டது.

## ‘இன துரோகிகள்‘

தமிழர் அரசியல் போக்கே அலாதியானது. அவர்களைப் பொறுத்தவரையில், அமிர்தலிங்கம் உள்பட எத்தனையோ தமிழ் தலைவர்களையும், அது போன்றே தம்மையொத்த போராளி குழுக்களையும் அழித்து ஒழித்த விடுதலை புலிகள் அமைப்பு, தமிழ் தேசியவாதத்தின் இரு கண்கள். ஆனால், அதே தலைமையின் உத்தரவின் பேரில் ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பிள்ளையான், சமூக எதிரி.

அதுபோன்றே, விடுதலைப் புலிகள் அமைப்பினால் படுகொலை செய்யப்பட்ட பிற தமிழ் போராளி குழுக்களின் தலைவர்கள் மறக்கப்பட வேண்டியவர்கள். ஆனால், அவர்களை எதிர்த்து அரசியல் செய்த பின்னரும் உயிரோடிருக்கும் டக்ளஸ். இன துரோகி.

அந்த விதத்தில், விடுதலை புலிகள் அமைப்பிற்கு பயந்து மேலை நாடுகளில் தஞ்சம் புகுந்த எத்தனையோ இளம் தமிழ் தலைவர்களும் போராளிகளும் இன்றும் தங்களது வயதாகி வரும் காலத்தில் வாய்மூடி மௌனிகளாகவே தொடர்கிறார்கள். அங்கும் அவர்களை பயம் தொடருகிறதா, அல்லது அவர்களை பயமுறுத்துபவர்கள் தொடர்கிறார்களா, என்ற கேள்வியும் எழுகிறது.

## தார்மீக பொறுப்பு

இவை எல்லாம் இவ்வாறிருக்க, இந்தியத் தூதுவர் விடயத்தில் சிவஞானம் கூறிய முக்கிய கருத்துத்தான் என்ன? அவரது கூற்றுபடி, தமிழர்களுக்கு பதிமூன்றாம் தீர்வுத் திட்டத்தின் கீழ் அனைத்து அரசு அதிகாரங்களையும் பெற்றுத் தரவேண்டிய தார்மீகப் பொறுப்பு இன்றளவும் இந்தியாவிற்கு உள்ளது. அது ஓரளவிற்கு உண்மையும்கூட எனவேதான், இந்த முறையும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூட்டத்தில் இந்தியா, இலங்கை அரசு பதிமூன்றை முழுமையாக அமல்படுத்தவேண்டும் என்று குரல் கொடுத்தது.

அந்த விதத்தில், சிவஞானம் சர்வதேச அரங்கில் இந்தியா கூறியதை வழிமொழிந்தார். அவ்வளவுதான். சொந்தச் சரக்காக அவர் சேர்த்தது, இந்திய தூதுவர், அனைத்துத் தமிழ் தலைமைகளும் ஒருங்கிணைந்து குரல் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்தார் என்று கூறிய சொச்சம். அவ்வளவுதான்.

அது சரி, இன்று பதிமூன்றின் முழுமையான செயல்பாடு என்று கூறும் சிவஞானம் சார்ந்த கட்சியே கடந்த காலங்களில் எத்தனை-எத்தனை முறை, தடம் புரண்டிருக்கிறது? இப்போதும்கூட, அவர் ‘பதிமூன்றிற்கும் அப்பால்‘ என்பதே தங்களது குறிக்கோள் என்று சாரப்படும்படி அவர் கூறி உள்ளார். அதில் தவறு இருப்பதாக கருத இடமிருக்கவில்லை.

முன்பு, மகிந்த மற்றும் சிறிசேனா ஆட்சி காலங்களில் ‘தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் அவர்கள் (பேச்சு மூலம்) முடிவு செய்யும் தீர்வு திட்டத்திற்கு ஆதரவு வழங்குவோம் என்றுகூட இந்தியாவும் கூறியுள்ளது. ஆனால், தமிழர்களிடையே ஒற்றுமை இல்லை என்பது மட்டுமல்ல இங்கு சிக்கல், சாண் ஏறினால் முழம் இறங்கும் அவர்களது அரசியல் போக்கே இதற்கு காரணம்.

## பதிமூன்றிற்கும் அப்பால்

அண்மைக் கால நிகழ்வுகளில் இருந்து ஒரு சாம்பிள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் செல்வம் அடைக்கலநாதன் முன்னெடுத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான, தமிழர் தரப்பு கடித அரசியலை இந்த விடயத்தில் உதாரணமாகக்கூறலாம். ஒரு கட்டத்திற்கு மேல், அந்தக் கடிதமே அரசியலாகி சந்தி சிரித்தது. தன்னை, தற்போது மறந்துபட்ட கூட்டமைப்பின் துணைத் தலைவராக பிரகடனப்படுத்திக் கொண்ட செல்வம், தனது சர்வதேச அரசியலின் கன்னி முயற்சியாக இந்திய பிரதமருக்கு அனைத்து தமிழ் கட்சிகளும் ஒருமித்து கடிதம் எழுதுவதாக முடிவு செய்தார்.

ஆனால் அதுவே சிக்கலாகி, பின்னர் மறைந்த ‘கிழட்டு சிங்கம்‘ சம்மந்தனின் சமஸ்தானத்தின் முன் தீர்விற்கு விடப்பட்டது. செல்வத்தின் கடித நகலில் பல தலைவர்களும் கைசாத்திட்ட நிலையில், சம்மந்தன் அதனை மாற்றி எழுதி, அதில் தனக்கே உரித்தான இடைசெருகல்களையும் வைக்கத் தவறவில்லை. அந்த வகையில், முழுமையான பதிமூன்று தீர்வு என்பது உடனடி தேவை, ஆனால் பதிமூன்றிற்கும் அப்பால் என்பதே தங்களது நிரந்தர கோரிக்கை என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

வேறு யாருக்கு புரிந்ததோ இல்லையோ, சம்மந்தனுக்கு ஒரு விடயம் நன்றாகவே தெரிந்திருந்தது. இந்தியாவைப் பொறுத்தவரையில்,பதிமூன்றின்அனைத்துஷரத்துக்களையும் முழுமையாகஅமல்படுத்தவேண்டும்என்றுமட்டுமேஇந்தியா, இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க முடியும். அதற்கு அப்பால் சென்று, இலங்கை அரசும் தமிழ் தரப்புகளும் புதிதாக ஒரு தீர்வு திட்டத்தை அமல்படுத்தும் என்றால், இந்தியா, அதற்கு தனது ஆசியையும் ஆதரவையும் கொடுக்க முடியும். அழுத்தம் கொடுக்க முடியாது.

இந்த சமகால சரித்திர பின்னணியில்தான், தமிழ் அரசு கட்சியின் தலைவர் என்ற ஹோதாவில், சிவஞானம் பதிமூன்று மற்றும் பதிமூன்று-ப்ளஸ் ஆகிய இரு கட்ட தீர்வு திட்டத்தை மீண்டும் கையில் எடுத்திருக்கிறார். அது வரவேற்க தக்கதும் கூட. ஆனால், அவற்றுடன் அவர் எதற்கு இந்திய தூதுவரையும் இணைத்து பேசினார் என்பது புரியாத புதிர்! அல்லது, அவருக்கு மட்டுமே விடை தெரிந்த புதிர்!

காலைக்கதிர் Kalaikkathir

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட எவான்பபஜோர்ஜியோ தெரிவித்த விடயங்கள் வருமாறு:

விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் குறித்த 5 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பில் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும், இலங்கை ஆளும்தரப்புக்கும் இடையில் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. நாணய நிதிய செயற்திட்டத்துக்கு அமைவாக 2026 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படல், பல்தரப்புப் பங்காளர்களின் நிதியியல் பங்களிப்பை உறுதிப்படுத்தக்கூடியவகையில் நிதியியல் உத்தரவாத மீளாய்வு நிறைவுசெய்யப்படல் மற்றும்கடன்மறுசீரமைப்புசெயன்முறையில் போதியளவு முன்னேற்றம் அடையப்படல் ஆகிய விடயங்களின் அடிப்படையிலேயே இந்தஉத்தியோகத்தர்மட்டஇணக்கப்பாட்டுக்கு நாணயநிதியத்தின்பணிப்பாளர்சபைஒப்புதல் அளிக்கும். பணிப்பாளர்சபையின் ஒப்புதலை அடுத்து இலங்கைக்கு 347 மில்லியன் டொலர் நிதி வழங்கப்படும். அதன்மூலம் இதுவரையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த நிதியின் பெறுமதி 2.04 பில்லியன் டொலராக உயர்வடையும்.

அதேவேளை இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வலுவான மறுசீரமைப்பு செயற்திட்டங்கள் மூலம் பாராட்டத்தக்க பெறுபேறுகள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன. 2025 இன் முதல் அரையாண்டில் பொருளாதாரம் 4.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருப்பதுடன் அவ்வளர்ச்சி இவ்வருடம்முழுவதும்தொடரும் எனஎதிர்பார்க்கின்றோம். அத்தோடுபணவீக்கம் சாதக மட்டத்தை; அடைந்திருப்பதுடன் செப்டெம்பரில் விலைகள் 1.5 சதவீதத்தினால் அதிகரித்தன. கடந்தசெப்டெம்பர்மாதஇறுதியில் மொத்த வெளிநாட்டுக்கையிருப்பின் பெறுமதி 6.1 பில்லியன் டொலராக உயர்வடைந்தது. 2025 இன் முதல் அரையாண்டில் நிதியியல் செயலாற்றம் மிக வலுவானதாக அமைந்ததுடன் மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட வரிகள் அதற்கு ஆதரவளித்தன. கடன்மறுசீரமைப்பு செயன்முறை பூர்த்தியடையும் தருவாயை எட்டியுள்ளது.

உறுதியான நிதியியல் வருமான உட்பாய்ச்சல் மற்றும் வெளியக மீண்டெழும் தன்மையில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பவற்றுடன் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்ட அமுலாக்கம் வலுவானதாக அமைந்திருக் கின்றது. அதேபோன்று பெரும்பாகப்பொருளா தார ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், அழுத்தங்களிலிருந்து மீண்டெழும் தன்மையை மேலும் விரிவுபடுத்துவதற்கும் தற்போதைய மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து பேணுவது இன்றியமையாததாகும். நிலையற்றவர்த்தகக் கொள்கைகள் மற்றும் பூகோள அரசியல் குழப்பங்களின்விளைவாகபொருளாதாரத்தின் மீதான எதிர்மறைத்தாக்கங்களுக்கான சாத்தியப்பாடுகள்அதிகரித்துவரும்தற்போதைய சூழ்நிலையில் மேற்கூறப்பட்ட விடயங்கள் மிக அவசியமானவையாகும்.

அதேபோன்று 2026ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டமானது நாணய நிதிய செயற்திட்டத்தின் கூறுகளுக்கு ஏற்றவாறு அமையவேண்டும். குறிப்பாக வரி வருமானத்தை அதிகரிப்பதற்கான நிலையான முயற்சிகள், வரி செலுத்துகைத் தளத்தை விரிவுபடுத்தல் மற்றும் வரி ஏய்ப்பை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மூலம் வருமான வலுவிழப்பை உரியவாறு கையாளல் போன்ற விடயங்கள் இதில் உள்வாங்கப்படவேண்டும்.

மேலும் செலவினங்களை ஈடுசெய்யக்கூடியவாறான வலுசக்தி விலையிடல்முறைமை, அரசுக்குச்சொந்தமான நிறுவனங்களின் நிர்வாகத்தை வலுப்படுத்தல், அவற்றின் கடன்நெருக்கடியை சீரமைப்பு நிதியியல் உறுதிப்பாட்டை மேம்படுத்தல் என்பனவும் இன்றியமையாதனவாகும்.

## ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்குழுவால்பரிந்துரைக்கப்பட்டுள்ள சுங்கத் திணைக்கள அதிகாரி சீவலி அருங்கொடவுக்குதண்டனைவழங்குவதற்கு பதிலாக, அரசுத் தலைவர் அநுரகுமார அவருக்குப் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு வழங்கியுள்ளார். ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்கள்கூட இல்லாத நிலையில், அவரைவிட மூத்த அதிகாரிகள் இருவர் இருந்தபோதிலும், தண்டனைபெறவேண்டிய ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கியதன் மூலம் ஆளும்தரப்பு மக்களுக்கு என்ன கூற முற்படுகிறது? நாம் ஊழல், மோசடியாளர்களை பாதுகாப்பதோடு எமக்கு வேண்டியவற்றை செய்வோம் என்பதே ஆளும்தரப்பின் செய்தியாகும் என்றார் கம்மன்பில.

கடந்த தை மாதத்தில் எவ்வித சோதனைகளும்இன்றி துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் அளித்துள்ள முறைப்பாடு குறித்த விசாரணைக்கு இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகிய அவர், பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று முழு நாடும் பாற்சோறு உண்ண வேண்டிய நாளாகும். வரலாற்றில் முதன் முறையாக எவ்வித சோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காகவே நாம் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைக்கின்றோம். ராங்கதிஸாநாயக்கவின் பொய் நாடகங்களை நிறுத்துவதற்காகவே நாம் இந்த நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

தை மாதம் இடம்பெற்ற இந்த கொள்கலன் விடுவிப்பு மோசடி தொடர்பில் ஒன்பது மாதங்கள் கடந்தேனும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. கொள்கலன் விடுவிக்கப்பட்;டமை தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராகச் செயற்பட்ட சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருங்கொட, அவற்றில் போதைப்பொருட்கள், ஆயுதங்கள், தரம் குறைந்த மருந்துகள் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

அவர் இவ்வாறான கருத்தை தெரிவித்த அந்த சந்தர்ப்பத்தில்கூட பெக்கோ சமனுடை போதைப்பொருள் தயாரிப்பு மூலப்பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்துள்ளன. இது தொடர்பில் ஆராய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளர், பிரதி திறைசேரி செயலாளர் உள்ளிட்டோரடங்கிய விசாரணைக் குழுவினால் நியாயமான அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் 28ஆவது பக்கத்தில் துறைமுகத்தில் நிலவிய நெரிசலுக்கான தீர்வாகவே குறித்த கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாக, விசாரணைகளின்போது தம்மால் இனங்காணப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறெனில் அந்தக் காரணம் பொய்யானது என அந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. 27ஆவது பக்கத்தில் சோதனைகள் இன்றிக் கொள்கலன்களை விடுவித்துப் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு பணிப்பாளர் நாயகத்துக்கு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

29ஆவது பக்கத்தில் இவர்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகளை முன்னெடுத்து தண்டனை வழங்கப்படவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சீவலி அருங்கொடவுக்குதண்டனைவழங்குவதற்கு பதிலாக, அரசுத் தலைவர் அநுரகுமார அவருக்குப் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு வழங்கியுள்ளார். ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்கள்கூட இல்லாத நிலையில், அவரைவிட மூத்த அதிகாரிகள் இருவர் இருந்தபோதிலும், தண்டனைபெறவேண்டிய ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கியதன் மூலம் ஆளும்தரப்பு மக்களுக்கு என்ன கூற முற்படுகிறது? நாம் ஊழல், மோசடியாளர்களை பாதுகாப்பதோடு எமக்கு வேண்டியவற்றை செய்வோம் என்பதே ஆளும்தரப்பின் செய்தியாகும் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# நுவரெலியா தபால்நிலைய ஊழியர்கள் கறுப்பு கைப்பட்டி அணிந்து போராட்டம்

*(கிஷாந்தன்)*

உலக அஞ்சல் தினமான நேற்று நுவரெலியா தபால் நிலைய ஊழியர்கள் பிரதான அஞ்சல் அலுவலகம் முன்பு கறுப்பு கைப்பட்டி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஊழியர்களை அவமதிக்கும் வகையில் அஞ்சல் மா அதிபர் வெளியிட்ட அறிக்கையை திரும்பப் பெறக் கோரி இந்த போராட்டம் நடைபெற்றது. ஊழியர்கள் உணவு நேரத்தில் தபால் நிலையத்தை மூடிவிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சில தபால் நிலையங்கள், பிராந்திய தபால் நிலையங்கள் மற்றும் துணை தபால் நிலையங்களின் ஊழியர்கள் கறுப்பு கைப்பட்டி அணிந்து பணிக்கு சென்றிருந்தமை குறிப்பிடதக்கது.

# போதைப்பொருள் வியாபாரி அம்பாறையில் நேற்று கைது

*(பாறுக் ஷிஹான்)*

நீண்டகாலமாக போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட போதைப்பொருள் வியாபாரியை அம்பாறை பொலிஸ் தலைமையக ஊழல் தடுப்புப் பிரிவு கைதுசெய்துள்ளது.

நேற்று அம்பாறை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவகம்புர பகுதியை சேர்ந்த சந்தேகநபர் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்து கொண்டிருந்த நிலையில் கைதானார். அம்பாறை தலைமையக பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்படார்.



அவர் சிறிது காலமாக ஈசி பண பரிமாற்றம் மூலம் போதைப்பொருட்களை விநியோகித்து வந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. கைதான சந்தேகநபர் வசம் இருந்து 3.500 கிராம் ஹெரோயின் மற்றும் 2.100கிராம் ஐஸ் போதைப்பொருள் கைத்தொலைபேசி போதைப் பொருளை விநியோகிக்க பயன்படுத்துப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 18வயதுடைய அம்பாறை நவகம்புர பகுதியைச் சேர்ந்தவராவார்.

மேலும் அம்பாறை மாவட்ட பதில் பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் குமார தலைமையில் அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் விக்ரமாராச்சி அம்பாறை ஊழல் தடுப்பு பிரிவு உப பரிசோதகர் உள்ளிட்ட பொலிஸ் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்

# மோ. சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 98ம் கட்டை சந்தியில் மோட்டார் சைக்கில் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.




குறித்த விபத்து ஒக்டோபர் 08 இடம் பெற்றுள்ளது. இவ் விபத்தில் மூதூரை சேர்ந்த (வயது 55) குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் தெரியவருவதா பொது போக்குவரத்து பஸ்ஸில் இருந்து இறங்கி மஞ்சள் கடவையைக் கடக்கும்போது வேகமாக வந்த மோட்டார் சைக்கில் மோதியதில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.உயிரிழந்தவரின் சடலம் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் காயங்களுக்குள்ளாகி மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலைவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# இளைய தலைமுறையும் ஆன்மீக நாட்டமும்

இன்றைய இளைய தலைமுறை அறிவியல், தொழில்நுட்பம், கல்வி போன்ற துறைகளிலே பெரும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. உலகம் சிறிய கிராமமாக மாறிவிட்ட நிலையில், இளைஞர்கள் பல புதிய வாய்ப்புக்களை நாடிச் செல்கின்றார்கள். ஆனால் இந்த முன்னேற்றமானது மனநிலையிலும் பண்பாட்டிலும் சமநிலையைத் தவிர்த்துவிட்டது. இன்றைய நவீன தலைமுறையிலே ஆன்மீக நெறிகளும் நாட்டமும் மிக அரிதாகவே காணப்படுகின்றது.

ஆன்மீகம் என்பது மதம் மட்டுமல்ல. அது மன அமைதி, நேர்மை, கருணை, பொறுப்பு, பிறர் மீதான அக்கறை போன்ற நற்குணங்கள் வளரும் இடம். ஆன்மீக நாட்டம் இல்லாமல் எந்தவித முன்னேற்றமும் முழுமையடையாது.

இளைஞர்கள் ஆன்மீக நெறியிலே வளரும்போது, அவர்கள் நல்ல குடிமக்களாகவும் நேர்மையான தலைவர்களாகவும் தன்னலமற்ற சேவையாளர்களாகவும் மாறுகின்றார்கள். ஆன்மீகத்தை வளர்ப்பதற்கு தியானம் யோகம் நல்ல நூல்கள் சமூகசேவை போன்றன பெரிதும் உதவுகின்றன. இளைஞர்களுக்கு வாழ்வில் நேர்மை பொறுப்பு தன்முனைவு பொறுமை ஆகியன மிக அவசியம். இவை அனைத்தும் ஆன்மீகக் கருத்துக்களில் உள்ளடக்கமாக இருக்கின்றன. ஆன்மீக வாழ்க்கை நம்மை சுய பரிசோதனை செய்ய வைக்கும். அது தவறுகளை உணரவைத்து மாற்றம் தேடவைக்கும்.

இன்றைய இளைஞர்கள் அதிகமாக தொலைபேசி, இணையம், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் இதுவே அவர்கள் மனஉறுதியையும் ஒருமுக கவனத்தையும் கலைக்கிறது. இந்நிலையில் ஆன்மீகம் அவர்களின் உள்ளார்ந்த அமைதியை மீட்டுத்தரும்.

இப்போது உள்ள கல்வி முறையில் அறிவியல் கணிதம் முக்கியமாயினும் ஒழுக்கம், கருணை, நேர்மை ஆகியவற்றுக்கு குறைவான முக்கியத்துவம் தரப்படுகின்றது. அறத்துப்பால், பகவத்கீதை, தற்போதைய சமூக வீரர்கள் பற்றிய உண்மைகள் போன்றன மாணவர்களுக்கு ஆன்மீக உறுதியை வளர்க்கின்றன.

ஆன்மீக நாட்டம் இளைஞர்களின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கான அடித்தளம் ஆகும் ஆன்மீக நாட்டத்தை வளர்க்கும் சில வழிமுறைகளாக தினசரி தியானம் அல்லது நிம்மதி தரும் செயல்கள் போன்றவற்றில் ஈடுபடுதல், வழிபாடுகளில் ஈடுபடுதல் இவை போன்ற பல வழிமுறைகளைக் கையாண்டு கொள்ளலாம்.

இன்றய இளைஞர்கள் வெற்றியை நோக்கி ஓடுகிறார்கள். ஆனால் வெற்றி மட்டும் வாழ்க்கையை முழுமையாக்காது. அறம், பரிவு, ஒழுக்கம் ஆகியவை இல்லாமல் வெற்றி என்பது வெறுமை தான். ஆன்மீகம் இவை மூன்றையும் வலிமைப்படுத்துகின்றது. ஆன்மீகம் இல்லாத அறிவு தீவிரமான வலிமையில்லா நெருப்பைப் போன்றது ஆகும்.

ஆன்மீகம் எனப்படுவது 'அர்த்தம் தரும் வாழ்க்கையை நோக்கி செல்லும் உள்முயற்சி' இது நெறிப்பண்புகளை வளர்க்கும். ஆன்மீகமானது வாழ்க்கையின் உண்மையான பயணம் - நாம் யார்? ஏதற்காக வாழ்கிறோம்? ஏன்பதை உணரவைக்கும்.

ஆன்மீக நடைமுறை உள்ள இளைஞர்கள் இருமடங்கு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் எனவும், ஆன்மீக கல்வி பெற்ற மாணவர்கள் சமூக நெறிகள் போன்றவற்றில் சிறப்பைக் காட்டுகிறார்கள் எனவும் ஆன்மீக கருத்துடன் சேர்க்கப்படும் கல்வி , மாணவர்களின் முடிவெடுக்கும் திறனை நாற்பது வீதம் அதிகரிக்கக்கூடியது எனவும் பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

இன்று சுதந்திரம் எனக்கூறுவது காதலிப்பது , அலைந்து திரிவது, எதையும் கேட்காமல் செய்வது என்று இளைஞர் சமுதாயம் எண்ணுகின்றது. ஆனால் ஆன்மீகம் கூறுவது 'சுய கட்டுப்பாடே உண்மையான சுதந்திரம்.'இதில் பயிற்சி பெற்ற இளைஞர்கள், பொறுப்புடன் வாழக் கற்றுக் கொள்வதோடு தீயபழக்கவழக்கங்களில் சிக்காமல், நிலைத்த மனநிலையோடு வாழ்கிறார்கள்.

'அறம் செய விரும்பு', 'இன்னா செய்யினும் இனியவாம் கூறல்' இவை திருவள்ளுவப் பெருந்தகையால் கூறப்பட்ட ஆன்மீகம் சார்ந்த போதனைகள் ஆகும்.

இவற்றின் நடைமுறைப்பயன்பாடுகள் இளைஞர்களை நல்ல வழியில் வளர்க்கும். ஆன்மீக நாட்டம் என்பது எளிமையான தியானம் அல்ல. அது ஒரு நெஞ்சார்ந்த விழிப்புணர்வு. அதை எடுத்துக்கொள்ளும் இளைய தலைமுறை தம் வாழ்க்கையை மட்டுமல்ல முழு சமூகத்தின் ஒளியையே உருவாக்கும்.

அறிவும் வளர்ச்சியும் காரியம் செய்யும் சக்தி. ஆனால் அந்த சக்தியை நல்ல நோக்கத்தில் பயன்படுத்த ஆன்மீக எண்ணம் தேவை. இல்லையேல் அது திசைமாறும். இன்றைய இளைய தலைமுறைக்கு நவீன அறிவும் ஆன்மீகத் தன்னிறைவும் இரண்டும் தேவையான இரு கரங்களாகும். அறிவு மேலே கொண்டு போகும். ஆன்மீகம் கீழே விழாமல் பிடித்துக்கொள்ளும்.

ஆகவே இளைய தலைமுறையானது அறிவிலும் திறமையிலும் வளர்வது போல ஆன்மீக நெறியிலும் வளர வேண்டும். அப்போது தான் அவர்கள் அறிவால் அல்ல, அறத்தால் ஒளிரும் தலைமுறையாக உருவாக முடியும்.

**காருண்யா**

---

## பேருந்துக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, அயலுறவுத்துறை அமைச்சர் முன்வைத்த கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். அதனை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் எமக்கு இருக்கும் கேள்வி என்னவென்றால், அயலுறவுத்துறை அமைச்சர் இலங்கை தொடர்பில் முன்வைத்த பிரேரணைக்கு ஏன் வாக்களிப்பு கோரவில்லை என்பதாகும். கடந்த காலங்களில் பிரேரணை முன்வைத்து, அதற்கு வாக்கெடுப்பு கோரப்பட்டிருந்தது.

அதேபோன்று ஆளும் தரப்பு பிரேரணைக்கு வாக்கெடுப்பு கோரியிருந்தால் உலக நாடுகள் எங்களுக்கு ஆதரவாக இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்த முடிந்திருக்கும் என்றார். அதற்கு அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் பதிலளிக்கையில், இலங்கை தொடர்பான பிரேரணைக்கு ஏன் வாக்கெடுப்பு கோரவில்லை என்பது தொடர்பில் எனது உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன. எனது பேச்சைக் கேட்டிருந்தால், உங்களுக்குப் பதில் கிடைத்திருக்கும் - என்றார்.

## பேருந்துக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வேளையில் ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் எழுந்தபோது, இந்த விடயத்தில் ஒழுங்குப் பிரச்சினை என்ன என்று சபாநாயகர் கேட்டார். பதிலளித்த சாணக்கியன், களனது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தியே இங்கே வந்துள்ளேன். இதனை விடுத்து நாடாளுமன்றத்தில் பூனை, எலிகளைப் பிடிக்க வரவில்லை. அமைச்சர் முக்கிய விடயத்தைக் கூறியுள்ளார். அது தொடர்பில் கேள்வியெழுப்பும் உரிமையை எங்களுக்கு வழங்குங்கள். அதனைத் தடுக்கவேண்டாம் என தெரிவித்து, அயலுறவுத்துறை அமைச்சர் ஏன் உங்களின் உரையில் மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் குறிப்பிடவில்லை என்று கேட்கப்பட்டபோது அவரின் ஒலிவாங்கி முடுக்கிவிடப்பட்டது.

இதன்போது மீண்டும் அமைச்சர் விஜித ஹேரத் பதிலளித்து கூறுகையில், நான் ஜெனீவா உரையில் மாகாண சபைகள் தேர்தல் குறித்து எங்களின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன் என்றார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷடி சில்வா கூறுகையில், ஏன் நீங்கள் வாக்கெடுப்புக்கு அச்சமடைய வேண்டும். அவ்வாறு அச்சமடையவது நல்லதல்ல. ஜீ.எஸ்.பி. விடயத்தில் நாங்கள் வாக்கெடுப்பை கோரினோம். அப்போது எங்களுக்கு 400 வாக்குகளும், எதிராக நூறு வரையிலான வாக்குகளும் கிடைத்தன என்றார்.

இதேவேளை, எதிர்க்கட்சி பிரதம கொரடாவான கயந்த கருணாதிலக்க எழுந்து கூறுகையில், அயலுறவுத்துறை அமைச்சரின் இந்த உரை தொடர்பில் நாங்கள் விவாதமொன்றை கோருகின்றோம் என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், ஜெனீவா தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதத்தை நடத்துவதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அந்த விவாதத்தில் உங்களின் கருத்துக்களை முன்வையுங்கள். அதன்போது நாங்கள் பதிலளிப்போம் என்றார்.

# இலங்கையைப் பற்றிய தீர்மானத்தை எரித்தவர்களுக்கு கடும் கண்டனங்கள்

சமீபத்திய ஐ.நா. மனித உரிமை பேரவையின் இலங்கையைப் பற்றிய தீர்மானத்தை எரித்தவர்களை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடுமையாக கண்டிக்கின்றனர் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க செயலாளர் ராஜ்குமார் தெரிவித்தார்.

வவுனியா, கண்டி வீதியில் சுழற்சி முறையில் இடம்பெற்று வரும் போராட்ட தளத்தில் ஒக்டோபர் 08 இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமீபத்திய ஐ.நா. மனித உரிமை பேரவையின் இலங்கையைப் பற்றிய தீர்மானத்தை எரித்தவர்களை கண்டிக்கின்றோம். இப்படியான செயல்கள் தமிழர்களின் உலகப்புகழை களங்கப்படுத்தி நியாயத்திற்கான எங்கள் போராட்டத்தை பலவீனப்படுத்துகின்றன. சில குழுக்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பணத்தையும் உணர்ச்சியையும் பயன்படுத்தி தமிழர்களை பிரிக்க முயற்சிக்கின்றனர். இது எங்கள் உரிமைக்கான போராட்டத்தை அழிக்க விரும்புவோருக்கு உதவுகிறது.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானத்தில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. இது தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களை ஏற்றுக்கொள்கிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவைப்படுவதை வலியுறுத்துகிறது மற்றும் இலங்கை ஐ.நா. கண்காணிப்பில் தொடர்கிறது. இது நன்மையான விடயம். ஆனாலும், இது தமிழ் இனப்படுகொலையை வெளிப்படையாக குறிப்பிடவில்லை. எந்த அரசியல் தீர்வையும் வழங்கவில்லை. மேலும் கொழும்பு அரசு நீதி வழங்குவதை தாமதப்படுத்த அனுமதிக்கிறது. இது தீமையான விடயம்.

தீர்மானத்தில் பலவீனங்கள் இருந்தாலும் அதை எரிப்பது தவறு. காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்கள் நம்புவது, தமிழர்கள் நாகரீகமானவர்களாகவும், தங்கள் இறையாண்மையை அமைதியாகவும் சட்டரீதியாகவும் மீட்கும் திறன் கொண்டவர்களாகவும் உலகிற்கு நிரூபிக்க வேண்டும் என்பதுதான். சனல் 4 ஆவணப்படத்திற்குப் பிறகு உலகம் எங்கள் வேதனையைப் புரிந்து கொண்டது. கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், பாலியல் வன்முறைகள், நில இழப்புகள், தமிழ் பரவல் சமூகமானது இன்று உலகளவில் வலிமையானதும் கல்வியறிவும் வாய்ந்ததுமான சக்தியாக மாறியுள்ளது. பல நாடுகளில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர மேயர்கள் ஆகியோர்




தமிழர்களாக உள்ளனர். இலங்கையின் தமிழ் எம்.பி.க்கள் செயலற்றவர்களாக இருந்தாலும், பரவல் தமிழர்கள் எப்போதும் எதிர்காலத்திற்காக சிந்தித்து

## விபுலானந்தா முன்பள்ளியில் உலக ஆசிரியர் தின விழா

(சகா)

காரைதீவு விபுலானந்தா முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த சர்வதேச ஆசிரியர் தின விழா ஒக்டோபர் 08 நடைபெற்றது.

பெற்றோர்கள் சார்பில் கலந்து கொண்ட பிரதீபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலைப் பணிப்பாளர் சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக ஜெயநிலந்தினி மற்றும் ரம்யா ஆசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பௌர்ணமி விழா

(சகா தேவராஜா)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் ஆலோசனையின் கீழ் செட்டிபாளையம் திருவருள் நுண்கலை மன்றம் மற்றும் நிருத்தியகலா மன்றங்கள் இணைந்து ஏற்பாடு செய்த பௌர்ணமி கலைவிழாவானது திருவருள் நுண்கலை மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் செட்டிபாளையம் சிவனாலய வளாகத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் உதயஸ்ரீதர் கலந்துசிறப்பித்தார். மேலும் இணைத்தலைவர் வனிதா தனசேகரன் பௌர்ணமியும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் சிறப்புரை நிகழ்த்தியதோடு ஓய்வு நிலை கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மனோகரன் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.



திருவருள் நுண்கலை மன்றம், நிருத்தியகலா மன்றம், செட்டிபாளையம் மகாவித்தியாலயம் மற்றும் சித்தி விநாயகர் அறநெறி பாடசாலை மாணவர்களின் நடனஆற்றுகைகள், பாடல்கள், வயலின் இசை மற்றும் கவிதை முதலான கலை ஆற்றுகை நிகழ்வுகள் அரங்கேறியது.

மேலும் செட்டிபாளையம் கிராமத்தில் பன்னெடுங்காலமாக கிராமிய கலைவளர்ச்சிக்கு அயராது பங்களிப்புச் செய்த சங்கரப்பிள்ளை கோபாலபிள்ளைமற்றும் கணபதிப்பிள்ளை செல்வநாயகம் ஆகியோருக்கு திருவருள் நுண்கலைமன்றத்தால் வழங்கப்பட்ட 'திருவருள் கிராமிய கலை ஜோதி' எனும்நினைவுபட்டமானது பிரதேச செயலாளர் உதயஸ்ரீதரினால் வழங்கிவைக்கப்பட்டதோடு கடந்த வருடங்களில் செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண பரீட்சையில் தோற்றி சித்திகளை பெற்ற 15 மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலகஉத்தியோகத்தர்கள், பிரதேச கலாசார அதிகாரசபையின் தலைவர் உட்படநிருவாகிகள், ஆசிரியர்கள், கலைஞர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# இன்று பாண்டிருப்பில் தீப்பள்ளயம்!

பாஞ்சாலி புகழ் பாடும் பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் தீப்பள்ளய உற்சவம்!

ஆம்.கிழக்கில் தீப்பள்ளயம் என்றால் பட்டி தொட்டி எல்லாம் பறையொலி முழுங்க சக்தி மயமாகும்.

அந்த தீப்பள்ளயம் கல்முனையை அடுத்துள்ள பாண்டிருப்பு எனும் பழந்தமிழ் கிராமத்தில் எழுந்தருளியுள்ள திரௌபதி அம்மன் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறுவது வழக்கம்.

இவ் வருடத்திற்கான தீமிதிப்பு வைபவம் இன்று (10) வெள்ளிக்கிழமை மாலை பக்தி பூர்வமாக இடம்பெறும்.

ஆம், மகாபாரத இதிகாசத்துடன் தொடர்புடைய கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இலங்கையில் முதன் முதலில் உருவான திரௌபதி அம்மன் கோயில் இதுவாகும். இலங்கையில் அதிகூடிய 18 முழ நீளமான தீக்குழி இங்கு தான் உள்ளது. அங்கு பக்திப் பரவசத்துடன் பாஞ்சாலி பஞ்ச பாண்டவர்கள் கிருஷ்ணர் குந்தி தேவி மற்றும் அனுமதிக்கப்பட்ட விரதம் நோற்ற தேவாதிகள் மாத்திரம் தீமிதிப்பில் ஈடுபடுவார்கள்.

இவ் உற்சவம் மகாபாரத போரை நினைவு கூரும் முகமாக தொடர்ந்து 18 நாட்கள் நடைபெற்று வந்தது.

நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை பாற்பள்ளயம், தருமருக்கு முடி சூட்டுதல் தீக்குழிக்கு பால்வார்க்கும் நிகழ்வு இடம்பெற்று அன்று இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு அம்மன் முத்துச் சப்புறத்தில் எழுந்தருளி ஊர்வலம செல்லும் நிகழ்வுடன் உற்சவம் இனிதே நிறைவு பெறவுள்ளது.

வரலாறு!

இலங்கையிலே முதன் முதலில் திரௌபதை அம்மனுக்கென ஆலயம் அமையப்பெற்றது பக்தி மணம் கமளும் பாண்டிருப்பிலேயாகும். இவ் ஆலயத்தின் வரலாறு மிகத்



தொன்மையானதாகும். வட இந்தியாவில் இருந்து வைஷ்ணவ மதத்தை பரப்பும் நோக்கோடும், மகாபாரத இதிகாசத்தை மக்கள் மத்தியில் நடித்துக்காண்பிக்கும் நோக்கோடும் தாதன் என்னும் மாமுனியும், அவனது ஆட்களும் கடல்வழியே பிரயாணம் செய்து மட்டக்களப்பு பகுதியை வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து அந்நாளில் நாகர் முனை என அழைக்கப்பட்ட திருக்கோயிலை சென்றடைந்து அங்கேயே தங்கியிருந்து மகாபாரத இதிகாசக் கதையினை மக்கள் மத்தியில் போதித்துவந்தனர்

வட இந்தியாவில் இருந்துவந்த தாதன் என்பவன் இங்கு வந்திருப்பதனை ஒற்றன் மூலம் அறிந்து கொண்ட அப்போது மட்டக்களப்பு பகுதிக்கு சிற்றரசனாக இருந்த மாருதசேனனுடைய புத்திரன் எதிர்மன்னசிங்கன் (கி.பி.1539-கி.பி.1583) தாதனைக்கண்டு அவனது வருகை, குலம், நோக்கம், கோத்திரம், நாடுஎன்பவற்றை விசாரித்திருந்தான்.

தாதனும், தான் வருகை தந்த நோக்கத்தை மன்னனிடம் தெரிவித்து அதற்கேற்ற உகந்த இடம் ஒன்றை தேடி வழங்குமாறு மன்னனிடம் கேட்டுக்கொண்டான். மன்னனும் தானின் விருப்பப்படியே கடல் வழியே பிரயாணம் மேற்கொண்டபோது அருகே கடலும், ஆலவிருட்சங்களும், கொக்கட்டிமரங்களும் மேற்கே வனப்பகுதியும் காணப்பட்ட பாண்டிருப்பைக் கண்டு



அங்கேயே தாம் கையோடு கொண்டுவந்திருந்த திரௌபதை, விஸ்ணு, பாண்டவர்கள் சிலைகளை வைத்து வழிபாடு நடத்தி வணாங்கிவந்தான். மன்னனும் தாதனின் வழிபாட்டு முறைக்கு பூரண ஆதரவை தெரிவித்தான்.

அக்காலத்தில் திரௌபதை அம்மன் ஆலயத்தின் மகிமையை கேள்வியுற்ற கண்டி மாநகரை ஆட்சிபுரிந்த அரசனான விமலதர்ம சூரியன் (கி.பி.1594 கி.பி.1604)இல் இங்குவந்து அம்மனை தரிசித்துவிட்டு சென்றதாகவும், இவ்வாலயத்திற்காக தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களை பரிசாக அளித்துச் சென்றுள்ளான் என கல்வெட்டுக்களில் இருந்த அறியக்கிடக்கின்றது.

இந் நிகழ்விற்கு நாட்டின் நாலாபாகங்களில் இருந்தும் அதிகளவிலான பக்தர்கள் பாண்டிருப்புக்கு வருகை தருவது வழக்கம். இதனையிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் வருட மகோற்சவம் சிறக்க வாழ்த்துக்கள்.

வித்தகர் விபுலமாமணி
வி.ரி. சகாதேவராஜா
காரைதீவு நிருபர்



காலைக்கதிர் Kalaikkathir

# நிந்தவூரில் கடலரிப்பு வேகம் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான் )

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் கரையோரப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடல் அரிப்பு அதிகரித்து வருகின்றமை தடுக்க இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட மீனவர்கள் விசனம் தெரிவித்தனர்.

நிந்தவூர் பிரதேசத்தில் நிரந்தரமாக கடல் அரிப்பை தடுக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் தற்போது தற்காலிகமாக மண்மூட்டைகளினால் பாதுகாப்பு சுவர் அமைப்பதாகவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் மற்றும் அவர்களின் மீன்வாடிகளை வேறு பிரதேசங்களுக்கு மாற்றி தருவதாகவும் மாவட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு சென்ற போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த கடல் அரிப்பினால் மீன்பிடி வாடிகள் பாதிப்புற்று கடல் ஊடறுத்து செல்வதனால் கரையோரத்திலுள்ள 40 க்கும் அதிகமான தென்னை மரங்களும் அழிந்து விடும் அபாய நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

இதனால் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கடல் அலைகளாலும் நீரோட்டங்களாலும் கரையில் உள்ள மண் அல்லது பாறைகள் அரித்துச் செல்லப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்காக கருங்கல்லிலான அணைக்கட்டு நிர்மாணிப்பதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தால் கடந்த காலங்களில் முதல்கட்டமாக பல மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# நலிவுற்ற குடும்ப மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கி வைப்பு

(நூருல் ஹுதா)

கிழக்கு மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தினால் சம்மாந்துறை கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட நலிவுற்ற குடும்பங்களிலுள்ள மாணவர்களின் வீட்டிலிருந்து பாடசாலை கல்வியை தொடர்வதற்கான துவிச்சக்கரவண்டி வழங்கும் வேலைத்திட்டம் நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தினூடாக இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் பிரதேச செயலாளர் றஸ்ஸான் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

இறக்காமம் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இதனூடாக பாடசாலை இடைவிலகளை தவிர்த்து, அவர்களின் பாடசாலைக் கல்வி மற்றும் கற்றல் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் இவ் உதவித்திட்டம் வழங்கிவைக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் றொஷின்தாஜ் கலந்து சிறப்பித்ததுடன் தெரிவு செய்யப்பட்ட மாணவருக்கு துவிச்சக்கர வண்டியினை வழங்கிவைத்தார். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் சப்றின், பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர் ஹுசைன், உளவளத்துணை உவியாளர் றகீப், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் இம்டாட் மற்றும் பல அதிகாரிகள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.








# குருதிக் கொடை

உலக அஞ்சல் தினைத்தை முன்னிட்டு காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான நிகழ்வுகள் இடம்பெற்றன.

காங்கேசன்துறை தபால் நிலைய தபால் அதிபர் சித்திறூபா தலைமையில் ஒக்டோபர் 08 நடைபெற்ற இரத்தான முகாமில் அஞ்சல் நிலைய உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கினர். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் இரத்ததிற்கு பெரும்தட்டுபாடு நிலவுவதாகவும் அதனால் இரத்த தானம் செய்யும் கொடையாளர்கள், இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்பவர்களை இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு இரத்த வங்கியினர் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# பாலர் பாடசாலைக் கல்விப் பணியக தலைமையகத்தை மட்டக்களப்பிலிருந்து அகற்றுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(சகா தேவராஜா)

கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியக தலைமைகாரியாலயத்தைமட்டக்களப்பிலிருந்துஅகற்றுவதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றுஒக்டோபர் 07 அக்கரைப்பற்றில் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனைவலயம், சம்மாந்துறைவலயம், அக்கரைப்பற்று வலயம், திருக்கோயில்வலயம் ஆகியவற்றின் முன்பள்ளி அபிவிருத்தி ஒன்றியத்தினால் இப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அக்கரைப்பற்றிலுள்ள அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலை கல்விப் பணிமனைக்கு முன்பாக இடம்பெற்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை காலமும் மட்டக்களப்பில் இயங்கிக் கொண்டு வரும் முன்பள்ளி கல்வி பணியகத்தின் தலைமைக் காரியாலயம் மட்டக்களப்பில் இயங்கி வருவதற்கான காரணம் கிழக்கு மாகாணத்தின் மத்திய பிரதேசமாக மட்டக்களப்பு இருப்பதனால் ஆகும். அம்பாறை மாவட்டத்தின் லகுகல, பாணம, பொத்துவில் தொடக்கம் தமண, உஹன, பிரதேசங்களில் இருந்து மிகவும் சிரமப்பட்ட நிலையில் தான் மட்டக்களப்பு காரியாலயத்திற்கு ஆசிரியர்கள் அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக செல்கின்றார்கள். இந்நிலையில் பாலர் பாடசாலை கல்வி பணியகத்தை திருகோணமலைக்கு இடமாற்றம் செய்தால் அரசினால் வழங்கப்படுகின்ற 6000 ரூபாய் கொடுப்பனவை விடவும் அதிகமாக செலவு செய்து முழு நாளையும் தியாகம் செய்து அந்தகாரியத்துக்கு சென்று வரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு முன்பள்ளி ஆசிரியர்களாகிய நாங்கள் உள்ளாக நேரிடும். இதன் காரணமாக மேற்படி இடமாற்றத்தை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். என கூறப்பட்டுள்ளது.




# கல்லுண்டாய் குடியேற்ற மூலத் திட்டம் தயாரிப்பு

கல்லுண்டாய்குடியேற்றக்கிராமத்துக்கானமூலத்திட்டம் (ளிழிவிமிளஷ்ஸ்ரீயிழிஜ) வடக்குமாகாணபொறியியலாளர் சங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபையால் படிப்படியாக நிதி ஒதுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

கல்லுண்டாய் குடியேற்றக் கிராமத்தில் புலம்பெயர்ந்தவர்களின்நிதிப்பங்களிப்பில்உருவாக்கப்பட்ட இந்திரநிலா மணிமண்டபம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

இங்கு ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நான் யாழ். மாவட்டச் செயலராக இருந்த காலத்தில் 2017ஆம் ஆண்டுதான் இந்தக் கல்லுண்டாய் குடியேற்றக் கிராமம் உருவாக்கப்பட்டது. இந்தக் கிராமத்துக்கு மக்களின் பல தேவைகள் இன்னமும் முழுமைப்படுத்திக் கொடுக்கப்படவேண்டியுள்ளன. நீங்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் உங்களுக்கான அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதைப்போல நீங்கள்தான் உங்கள் கிராமத்தை, வீட்டை முன்னேற்றுவதற்கு உழைக்கவேண்டும். உங்களின் அக்கறையிலும் அர்ப்பணிப்பிலும்தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது.

இந்த மணிமண்டபத்தை நிறுவுவதில் பல இடர்களை எதிர்கொண்டமை எனக்குத் தெரியும். ஆனாலும், மிகச் சிறப்பாக இதை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இங்குள்ள மக்கள்தான் இதனை மிக அழகாக அப்படியே பாதுகாத்து பயன்படுத்தவேண்டும்.

புலம்பெயர்ந்தவர்கள் எமது மக்களுக்கு உதவி செய்வதற்கு விரும்புகின்றார்கள். ஆனால் இங்குள்ள சிலர் அவர்களை ஏமாற்றுகின்றனர். அவர்களின் நம்பிக்கையை மோசடி செய்கின்றனர். அதனால் புலம்பெயர்ந்தவர்கள் உதவி செய்வதற்கு பின்னடிக்கும் நிலைமையும் காணப்படுகின்றது. வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதன் ஊடாகவும் அவர்களின் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாமல் நடப்பதன் ஊடாகவுமே வெற்றிகரமாக திட்டங்களைச் செயற்படுத்தலாம்.

இந்தக் கிராமம் மேலும் வளர்ச்சியடையவேண்டும். அதற்கு மாகாணசபை ஊடாக வழங்கக் கூடிய உதவிகளை வழங்குவேன் - என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில், சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# நகைகள் களவு போனதாக நாடகமாடிய பெண் கைது

(பாறுக் ஷிஹான்)

நகைகள் களவாடப்பட்டுள்ளதாக கணவரிடம் தப்பிப்பதற்கு பொலிஸாரை ஏமாற்றி நாடகமாடிய பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

செப்டம்பர் 27 அன்று அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்- மஸ்லம் வீதி பகுதியில் உள்ள வீடான்றில் சுமார் 45 இலட்சம் ரூபா பெறுமதியான நகைககள் களவாடப்பட்டுள்ளதாகவும் தனது கணவர்வெளிநாடு ஒன்றில் இருந்து இலங்கைக்கு திடிரென திரும்பவுள்ள நிலையில்இச்சம்பவம்இடம்பெற்றுள்ளதாக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் 32 வயதுடைய குடும்பப் பெண் முறைப்பாட்டினை மேற்கொண்டிருந்தார். குறித்த முறைப்பாட்டிற்கமைய நிந்தவூர் பொலிஸ்நிலையபொறுப்பதிகாரிபொலிஸ் பரிசோதகர் நிசாந்த வெதகேவழிகாட்டலில் பெருங்குற்றத்தடுப்புபிரிவுபொறுப்பதிகாரி உப பரிசோதகர் அஸீம் தலைமையில் பொலிஸ் குழுக்கள் புலன் விசாரணைகள் துரித கதியில் மேற்கொண்டிருந்தன. இதற்கமைய அம்பாறையில் இருந்து தடயவியல் பொலிஸ் பிரிவு இலங்கை பொலிஸ் மோப்பநாய் பிரிவு என்பன இச்சோதனையில் பங்கேற்றிருந்தன. இருந்த போதிலும் குறித்த வீட்டில் களவாடப்பட்டற்கான சான்றுகளோ அல்லது மேற் கூறப்பட்ட 45 இலட்சம் ரூபா நகைகள் திருடப்பட்டமைக்கான எவ்வித ஆதாரங்களும்கிடைக்கவில்லை. இருப்பினும் விசாரணையின் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்த குடும்ப பெண்ணில் சந்தேகமடைந்த பொலிஸார் அப்பெண்ணை ஒக்டோபர் 03 துருவிதுருவி விசாரணை மேற்கொண்ட போது பல்வேறுஉண்மைகள் வெளிவரத் தொடங்கியது.

இதனடிப்படையில் கணவன் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்ற நிலையில் தனியாக இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்த குறித்த பெண் தனது கையிருப்பில் இருந்த பணம் மற்றும் நகைகளை பல்வேறு தேவைகளுக்காக செலவு செய்துள்ளார். இந்நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சென்ற கணவன் திடிரென நாடு திரும்பும் நிலையில் இருப்பதாக அப்பெண்ணிடம் குறிப்பிட்டுள்ளார். இதனால் சற்று கலவரமடைந்த அப்பெண் 45 இலட்சம் ரூபா பெறுமதியான நகைககள் களவாடப்பட்டுள்ளதாக நாடகமாடி கல்முனை பகுதியில் உள்ள பிரபல நகையகத்திற்கு சென்று நகைகளை விற்பனைசெய்ததைஒப்புக்கொண்டதுடன் இச்செயற்பாட்டினை தனது கணவர் வெளிநாட்டில் இருந்து திடிரென இலங்கை வரவள்ளதாக தன்னிடம் தெரிவித்ததனால் இவ்வாறு நகைககள் திருடப்பட்டதாக நாடகம் ஆடியதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்ட அப்பெண் கைதுசெய்யப்பட்டு சம்மாந்துறைநீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்செய்தனர். இதன் போது குறித்த பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரஞ்சித்குமார் உத்தரவிட்டார். பின்னர் சந்தேக நபரான குறித்த பெண் சார்பில் இடைமனுக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன் போது அப்பெண்தனது குற்றத்தைஒப்புக்கொண்ட நிலையில் கடும் தொனியில் சந்தேக நபரை எச்சரித்த நிலையில்பிணையில் செல்ல நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2025இல் வெளியிடப்பெற்றது